மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அங்கே இடப் பிரச்சினைகள் இல்லாதபட்சத்தில் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து ஆய்வு செய்து, உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Isolation Ward பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். இன்று காலையில், நான், தலைமைச் செயலாளர் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கன்னியாகுமரி மருத்துவமனை Dean ஆகியோருடன், video conferencing மூலமாகப் பேசினோம். கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 30 படுக்கைகள் தற்போது தயார் நிலையில் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டம், கேரள மாநில எல்லையையொட்டி அமைந்திருப்பதால், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, அரசு சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூடுதலாக instructions கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

எள்ளுக்கு உரிய விலை

***51876—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் எள்ளுக்கு உரிய விலையை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 மார்ச் 20]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதியில் எள் சாகுபடி செய்யும் விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எள்ளுக்கான குறைந்தபட்ச ஆதார விலையினைவிடக் கூடுதலாக நல்ல விலை பெற்று வருகின்றனர். எனவே, எள்ளுக்கு குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் சூழல் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தினுடைய விடிவெள்ளி, உழைப்பால் உயர்ந்த உத்தமர், எங்களின் மாண்பிற்கினிய அன்புத் தளபதி அவர்களை வணங்குகிறேன்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா நெல் அறுவடைக்குப் பிறகு பயறு, உளுந்து மற்றும் எள் பயிரிடுவது வழக்கமாக நடைமுறையில் இருந்து வருகிறது. குறிப்பாக, மன்னார்குடி, மதுக்கூர், ஒரத்தநாடு, திருவையாறு மற்றும் திருக்காட்டுப்பள்ளி பகுதிகளில் மட்டும் கோடைக்காலத்தில் மாசி பட்டத்தில் TMV–4 மற்றும் விருத்தாசலம் VRI–2 ரக எள் விதைகளை குறைந்தளவு நீரைக் கொண்டு, நீர்பதத்தில் விதைக்கிறார்கள். நிலத்தை உழவு செய்து, நீர் பாய்ச்சி, எள் விதைத்து, பாத்திக்கட்டி, களையெடுத்து, பூச்சி மருந்து தெளித்து, கிட்டத்தட்ட 75 நாட்கள் கழித்து அறுவடை செய்கிற பயிர் எள். யானை பெரிதாக இருந்தாலும், அதனுடைய கண் சிறியதாகத்தான் இருக்கும். எள் உருவத்தில் சிறியதாக இருந்தாலும் மருத்துவக் குணம் கொண்டது. ஏக்கர் ஒன்றில் சராசரியாக 150 கிலோவிலிருந்து 200 கிலோ வரை மகசூல் கிடைக்கும். விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் நேற்றைய நிலவரப்படி, 200 கிலோ 24,000 ரூபாய் அளவிற்கு விற்பனையாகிறது. அப்படி இருக்கும்பட்சத்தில், ஒரு விவசாயிக்கு 4,000 ரூபாய்கூட கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மழைக் காலங்களில் அதிகளவு மழை பெய்தால் முற்றிலுமாக சேதமடையக்கூடிய நிலைதான் இருக்கிறது. இலாபம்

குறைவாக இருக்கின்றதால், எள் பயிரிடும் விவசாயிகளினுடைய எண்ணிக்கைத் தற்போது குறைந்திருந்கிறது. மாண்பிற்கினிய இந்தத் துறையினுடைய அமைச்சர் அண்ணன். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால் சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்பிற்கினிய இந்தத் துறையினுடைய அமைச்சர் அண்ணன் திரு. துரைக்கண்ணு அவர்களும், நானும் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த காரணத்தால் நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். தேங்காயிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யை தேங்காய் எண்ணெய் என்று சொல்கிறோம்; கடலையிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யை கடலை எண்ணெய் என்று சொல்கிறோம்; ஆனால், எள்ளிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யை எள் எண்ணெய் என்று நாம் சொல்வதில்லை; அதைமட்டும் நல்லெண்ணெய் என்றுதான் சொல்கிறோம். அந்த நல்லெண்ணெய்க்கு சரியான விலை தற்போது கிடைக்காத காரணத்தால், விவசாயிகள் மிகவும் சோர்வடைந்திருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தையும் அறிவித்திருக்கிறார். எள்ளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடப்பாண்டு 2019–2020–ல் எள் 43,100 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 4,800 ஹெக்டேர் பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் கும்பகோணம் வட்டாரத்தில் 146 ஹெக்டேர் பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எள் சாகுபடியில் விவசாயிகள் அதிக மகசூல் பெறுவதற்காக நவீன சாகுபடி தொழில்நுட்பங்களைக் கடைபிடித்திட தேசிய உணவு

பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் தமிழகத்தில் தற்போது 10,800 கிலோ சான்று பெற்ற எள் விதைகள் ரூ.8 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உற்பத்தி செலவிற்குக் குறையாத உரிய விலை கிடைப்பதற்காக குறைந்தபட்ச ஆதார விலையானது மத்திய அரசால் ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கப்படுகின்றது. இதன்படி 2019–2020 Kharif பருவத்திற்கு ஒரு கிலோ எள்ளுக்கு 64 ரூபாய் 85 பைசா குறைந்தபட்ச ஆதார விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், கும்பகோணம் தொகுதி உள்ளிட்ட பகுதிகளில் ஒரு கிலோ எள் ரூ.106/– என்ற அளவில் வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதேபோல் எள் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களான விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிலோ ரூ.118/–ம், ஈரோடு மாவட்டத்தில் ஒரு கிலோ ரூ.110/–ம், கடலூர் மாவட்டத்தில் ஒரு கிலோ ரூ.109/–ம் என்ற அளவில் விவசாயிகளுக்கு வெளிச்சந்தையில் நல்ல விலை கிடைத்து வருகின்றது. தற்போது எள் பயிரிடுகின்ற விவசாயிகள் குறைந்தபட்ச ஆதார விலையைவிட வெளிச்சந்தையில் எள்ளுக்கு நல்ல விலையைப் பெற்று வருகின்றனர். எனவே, எள்ளுக்கு குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலை எழவில்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மரியாதைக்குரிய அருமை அண்ணன் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு அடுத்து எள் என்ற வகையில் எள்ளிலிருந்து கிடைக்கும் நல்லெண்ணெய்யில் உடலுக்கு நன்மைசெய்யும் Phytosterol என்ற தாவரக் கொழுப்பு உள்ளது. குறிப்பாக இரத்த சோகையைப் போக்கும் இரும்புச் சத்து நிறைந்துள்ள எள்ளில் ஊட்டச்சத்துகள் அதிகம் நிறைந்துள்ளதால் எள் உருண்டை சாப்பிடும் வழக்கம் இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கின்றது. Back to old–பழையதை நோக்கி மீண்டும் போகின்ற நிலைமை இன்றைக்கு உருவாகியுள்ளதால் இதன் தேவை அதிகமாவதால் பயிரிடப்படும் நிலப்பரப்பை அதிகப்படுத்த வேண்டும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், ஒருகாலத்தில் விவசாயத் துறை

அதிகாரிகள் ஒவ்வொரு விவசாயிகளிடத்திலும் சென்று, ஒவ்வொரு நெல் பெயரையும், ஒவ்வொரு உளுந்து பெயரையும், ஒவ்வொரு பயறு பெயரையும், எள் பெயரையும் எடுத்துச் சொல்லி இவற்றையெல்லாம் விதைக்கலாம் என்றும், அதற்கான வருமானத்தினைப் பற்றியும் சொல்வார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலை இருக்கின்றதா என்று தெரியவில்லை. விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கின்றதா என்பது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். தற்போது வேளாண்மை விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ ரூ.115/– என்ற நிலையில் மத்திய அரசின் MSP என்கின்ற Minimum Support Price, குறைந்தபட்ச ஆதார விலை மிகவும் குறைவாக, ரூ.65/– என உள்ளது. தற்போது டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் எள் பயிரிடப்படுவது இன்றியமையாததாக உள்ளது. விவசாயிகள் எள் பயிரிடுவதை ஊக்கப்படுத்துவதற்கு விழுப்புரம், கரூர், ஈரோடு மாவட்டங்களைப்போல கூடுதலாக எள் பயிரிட மத்திய அரசின் MSP விலையை ஊக்குவிக்கும் வகையில். . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன் கேள்வியை முடியுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

திரு. க. அன்பழகன்: மத்திய அரசின் ஆதார விலையை நீங்கள் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே மன்றத்திலே ஆன்மிகவாதிகள் அதிகம் இருக்கின்றார்கள். அவர்கள் அதிகமாக வணங்குகின்ற தெய்வங்களில் ஒன்று திருநள்ளாறு சனீஸ்வரன். அவருக்கு ஆராதனை செய்கின்ற எண்ணெய் எள் எண்ணெய் என்பதைச் சொல்லி, இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, எள் கொள்முதல் விலையைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளிடம் விவசாய அலுவலர்கள் தொடர்பில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளும், வேளாண் அலுவலர்களும் தொடர்புகொள்ளக்கூடிய ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு விவசாயிகளும், விவசாய அலுவலர்களும் தொடர்ந்து நல்லுறவு

2020 மார்ச் 20]

கொண்டு அவர்களுக்குள் ஒத்துழைத்து இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு உணவு உற்பத்தியில் முதன்மை மாநிலமாக இருக்கிறது என்பதை நான் முதலில் அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால் விவசாயிகளுக்கும், வேளாண் உற்பத்தியாளர்களுக்கும் நல்ல விலையும், நல்ல வருமானமும் கிடைக்கின்ற வகையில் இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்ற அடிப்படையில் இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். எனவே, வேளாண் அலுவலர்கள் மற்றும் விவசாயிகளின் தொடர்பு தொடர்ந்து நல்லுறவாக இருந்துகொண்டிருக்கின்றது. தொடர்ந்து அவர்கள் இணைந்து செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியாளர்கள்மூலம் தற்போது எள் உருண்டை, எள் பலகாரம், எள் எண்ணெய் ஆகியவை மதிப்புக் கூட்டப்பட்டு கூட்டுறவுப் பண்ணைகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எள் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குப் போதிய விலை கிடைக்கவில்லை, அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்கின்ற வினாவை எழுப்பினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் உற்பத்தியைப் பொறுத்தவரையில் உற்பத்திக் காலத்தில் எந்தப் பொருளாக இருந்தாலும், விலை கூடுதலாகக் கிடைப்பதென்பது அரிதான ஒன்றுதான். விவசாயப் பெருமக்களின் உற்பத்தி எதுவாக இருந்தாலும் அதற்குக் கூடுதலாக விலை கிடைக்க வேண்டுமென்று எண்ணுகின்ற காரணத்தால், விலை கூடுதலாகக் கிடைக்கின்ற காலம் வரை உற்பத்தி செய்த தானியங்களை இருப்பு வைப்பதற்கு

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் தானியக் கிடங்கு என்று புதிதாக ஒரு கட்டடம் மாண்புமிகு அம்மாவுடைய அரசால் இப்பொழுது கட்டித் தரப்பட்டிருக்கின்றது.

அதேபோல ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒவ்வொரு நகரத்திலும் அமைத்துத் தரப்பட்டிருக்கின்றது. அங்கே தானியத்தை இருப்பில் வைத்துவிட்டு, அதில் 60 சதவிகிதத் தொகை எவ்வளவோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சீக்கிரம் முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: 60 சதவிகிதத் தொகை கூட்டுறவுச் சங்கத்தில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் (குறுக்கீடு) முக்கியமான விவரம் சொல்கின்றேன். நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி? நீங்கள் சென்னையில் குடியிருக்கிறவர். சென்னையில் குடியிருக்கிறவருக்கு விவசாயிகளின் உற்பத்தியைப் பற்றித் தெரியுமா? ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் (குறுக்கீடு) நல்ல பதிலை வரவேற்க வேண்டும். 60 சதவிகிதத் தொகையை விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் வழங்குகின்ற ஏற்பாட்டினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அற்புதமாகச் செய்து கொடுத்திருக்கின்றது.

எனவே, எப்பொழுது விவசாயிகள் விரும்புகின்ற விலை கிடைக்கின்றதோ அதுவரை உணவு தானியங்களை இருப்பு வைத்து, விலை உயர்கின்றபோது விற்றுக்கொள்ளலாம் என்பதற்கான ஏற்பாட்டினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது என்ற நற்செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

145—

பேருந்து வசதி

***8145—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—